*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 332/2020***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PSE-3***

*Name / Father's Name:* ***திரு.தங்கராசு த/பெ. கந்தகவுண்டர்***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **14.11.2025.**

துவக்க நேரம் 02.05 A.N

**முதல் விசாரணை**

1) நான், வனவராக பணிபுரிந்து தற்பொழுது ஓய்வு பெற்று வீட்டில் இருக்கிறேன். நான், கடந்த 2017-2018 ம் வருடம் கருமந்துறை வனச்சரக அலுவலகத்தில் வனவராக பணிபுரிந்து வந்தேன். கடந்த 27.02.2018 அன்று வனச்சரக அலுவலகருக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில், அன்று கறியகோயில் பீட், சூலாங்குறச்சி பிளாக் -5 மற்றும் தலக்கரை வனக்பகுதியில் வனச்சரக அலுவலர் திரு.ஞானராஜ், வனவராகிய நான், வனக்காப்பாளர்கள் திரு.சண்மும் மற்றும் திரு.கிருஷ்ணராஜ் ஆகிய நான்குபேரும் அந்த இடத்திற்கு குழுவாக சென்று சுற்றி பார்த்தோம்.

2) அப்பொழுது ஒரு நபர் வனப்பகுதிக்குள் செடி, கொடி, மரங்களை வெட்டி சுத்தம் செய்துகொண்டிருந்தார். மேற்படி அந்த நபரை சுற்றி வளைத்து விசாரித்தபொழுது, அவரது பெயர் வெள்ளையன் த.பெ கோடாங்கி தீர்த்தன் என்றும் கூறி, அவரது முகவரியை கூறினார். மேற்படி நபரிடம் வனப்பகுதி காப்புக்காட்டிற்குள் அத்துமீறி நுழைந்து விவசாயம் செய்யும் நோக்கத்தில் செடி, கொடி, மரங்களை வெட்டுவது தவறு என்று கூறினோம், அதற்கு அந்த நபர் தனக்கு தெரியாது என்று கூறினார். உடனே அவரை கைது செய்தவுடன், தனது

பெயர் மற்றும் விலாசத்தை கூறி ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். மேலும் அந்த ஸ்தலத்திலேயே, எங்கள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் மகஜர் ஸ்டேட்மென்ட், H நமூனா ஆகியவற்றை தயார் செய்ததில், நான், ஒப்புதல் வாக்குமூலம் மகஜர் ஸ்டேட்மென்டில் கையெழுத்து செய்தேன். அந்த ஆவணங்களில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். பின்பு எதிரியை நிலையம் அழைத்துவந்து, எதிரியின் மீது வழக்கு பதிவு செய்ய உதவியாக இருந்தேன்.

**எதிரி ஆஜர். எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) சூலாங்குறிச்சி காப்புக்காட்டிற்கு சர்வே எண் உள்ளதா என்றால் உள்ளது. இவ்வழக்கில் சர்வே எண்ணை குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. தலக்கரை கிராமத்தில் விவசாய நிலமும் உள்ளது என்றால் அருகில் உள்ளது. எதிரியின் தந்தை கோடாங்கிதீர்த்தனுக்கு கடந்த 06.06.1986ம் தேதியில் சூலாங்குறிச்சியில் சர்வே எண்.131ல் 1 ஏக்கர், 75 சென்ட் நிலம் வழங்கப்பட்டுள்ளது என்று சொன்னால் அதைப்பற்றி எனக்கு தெரியாது, குற்ற சம்பவம் காப்புக்காட்டில்தான் நிகழ்ந்தது.

2) மலையில் உள்ள பட்டா நிலங்களில் வருடத்திற்கு ஒருமுறைதான் பயிர் செய்கிறார்களா என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. பட்டா வழங்கப்பட்ட இடத்தில் உள்ள செடி, கொடிகளைத்தான் சுத்தம் செய்தார்களே தவிர, காப்புக்காட்டிற்கு சம்மந்தப்பட் இடத்தில் எதிரி எந்த சுத்தமும் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல, பட்டா நிலத்திற்கு அருகில் உள்ள நபர்தான், காப்புக்காட்டை ஆக்கிரமிப்பு செய்து, பயிரிடுவதற்காக நிலத்தை விரிவு செய்து, செடிகளை அழிக்கிறார்.

3) எங்களது வனப்பகுதிக்குள் சாலை இல்லை என்று சொன்னால் சரிதான், வனப்பகுதியை ஒட்டிய பட்டா நிலத்தில் பாதை இருக்கலாம். அந்த பாதைக்கு அருகில் உள்ள பட்டா நிலத்தில்தான் எதிரி அவரது செடி,

கொடிகளை சுத்தம் செய்தாரே தவிர, காப்புக்காட்டை சுத்தம் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. அ.த.சா.ஆ.6–ல் பாதை உள்ளது என்றாலும், அதனை ஒட்டிய பட்டா நிலத்தில்தான் எதிரி சுத்தம் செய்துள்ளார் என்று சொன்னாலும் சரியல்ல, அ.த.சா.ஆ.6 ல் உள்ளது பாதை இல்லை, புல்வெளி ஆகும்.

4) எதிரி வெட்டியதாக சொல்லும் முட்புதர்களை நாங்கள் சேகரித்து சென்றோமா என்றால் இல்லை, சேதப்படுத்திய செடி, முட்புதர்களை நாங்கள் வழக்கமாக எடுத்துச்செல்வதில்லை. இவ்வழக்கு சம்பவத்தில் வேறு பொருள் எதுவும் எடுத்துச்சென்றோமா என்றால் கொடுவாள் மட்டும் எடுத்துச்சென்றோம். அதனை என் முதல் விசாரணையில் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான்.

5) எதிரியை, சம்பவயிடத்தில் நான் பார்க்கவில்லை என்று சொன்னாலும், கைது செய்யவில்லை என்று சொன்னாலும் சரியல்ல. சம்பவயிடத்தில் எதிரியை நிற்க வைத்து புகைப்படம் எடுத்தோமா என்றால் இல்லை, ரகசிய தகவல் கிடைத்ததால் திடீரென சம்பவயிடத்திற்கு சென்றதால் கேமரா எடுத்துச்செல்லாததால் எதிரியை போட்டோ எடுக்கவில்லை. அ.த.சா.ஆ.6 எப்பொழுது எடுக்கப்பட்டது என்றால் சம்பவத்திற்கு மறுநாள் எடுக்கப்பட்டது.

6) எதிரியின் பட்டா நிலத்தில், எதிரி சுத்தம் செய்து வந்தபொழுது நாங்கள், தவறுதலாக காப்புக்காடு என்று நினைத்து, எதிரியின் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது எதிரி பட்டா நிலம் என்று சொல்லியும், எதிரியின் மீது தவறுதலாக இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல, எதிரியை கைது செய்யும்பொழுதும், எதிரியை விசாரிக்கும்பொழுதும் எதிரி பட்டா நிலம் என்று, எதையும் சொல்லிக்கொள்ளவில்லை.

7) எதிரியிடமிருந்து பெறப்பட்டதாக சொல்லும் ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரி கையெழுத்து செய்த பகுதியில் வேறொரு நபரின்

கையொப்பம் செய்யப்பட்டு, அதனை அழிப்பதற்காக அதன்மேல் ஒயட்னர் வைத்து அழித்து, பின்னிட்டு எதிரியிடம் வலுக்கட்டாயமாக கையொப்பம் பெறப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

8) எங்களது அலுவலகத்தில் வைத்து தயாரிக்கப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் எதிரியின் மீது இவ்வழக்கினை பொய்யாக தாக்கல் செய்துள்ளோம் என்றாலும், எதிரி தனக்கு பாத்தியப்பட்ட பட்டா நிலம் என்று சொல்லியும், காப்புக்காடு என்று தவறாக சொல்லி, எதிரியின் மீது இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னாலும் சரியல்ல.

9) எதிரியிடமிருந்து சான்று பொருள் எதையும், கைப்பற்றவில்லை என்றாலும், எங்களது அலுவலகத்தில் இருந்த கொடுவாளை எதிரியிடமிருந்து கைப்பற்றியதாக சொல்லி வழக்கில் தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல.

10) நான் தவறான இடத்தை குறிப்பிட்டு வரைபடத்தில் சம்பவயிடத்தை காட்டியுள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. எதிரியின் மீது பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல.

முடிவு நேரம் 02.34 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2025.11.14 17:00:42 +0530

Judicial Magistrate No.2, Attur.